நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,திருவையாறு**

வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண்.**CC.139 / 2022**

வழக்கு சாட்சி- **அ.சா.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | சிங்காரவேல் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | கலியபெருமாள் | : | தொழில் | விவசாயம் |
| கிராமம் | வடுகன் புதுப்பட்டி | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 58/2023 |

( 1வது எதிரி ஆஜர், 2 முதல் 6 வரை ஆஜர் இல்லை. எதிரிகள்தரப்பில் 317 குவிமுச பிரிவின்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. )

**<u>நாள் : 20.12.2023</u>**

**முதல் விசாரணை:**

நான் வடுகன் புதுப்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரியையும், மற்ற எதிரிகளையும் எனக்கு தெரியும். கடந்த 2018ஆம் ஆண்டு மாதம், தேதி நினைவு இல்லை. நான் மாடு மேய்பதற்காக வீட்டிற்கு அருகில் சென்றிருந்தேன். சத்தம் கேட்டு என் வீட்டிற்கு வந்து பார்த்தேன். என் மனைவியை கட்டையால் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தியிருந்தார்கள். எதிரி ஜெயச்சந்திரன் கட்டையால் என் மனைவியின் தலையில் அடித்ததாக அவர் கூறினார். அதன்பின்னர் தஞ்சாவூர் மெடிகலில் சிகிச்சைக்காக சென்றோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை

எங்களுக்கு எதிராக 2வது எதிரி தங்கராஜ் தஞ்சாவூரில் வழக்கு தாக்கல் செய்து எங்களுக்கு எதிராக தீர்ப்பாகி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு சம்மந்தமாக வழக்கறிஞரை பார்த்து 1 வருடமாகிறது. எங்களுக்கு எதிராக வழக்கு தீர்ப்பாகிவிட்டது என்றும், அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிககிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு வந்த போலிசாரின் பெயர்

எனக்கு ஞாபகம் இல்லை. நானும் பேப்பரில் கையெழுத்து செய்து கொடுத்தேன். எனது வீடு வடக்கு தெருவில் உள்ளது, எதிரிகளின் வீடு தெற்கு தெருவில் உள்ளது. சம்பவத்தை சுமார் 5-6 நபர்கள் பார்த்திருப்பார்கள். தூங்குமூஞ்சி மரம் எங்களுக்கு சொந்தமானது என்பதற்கான ஆவணங்களை காவல்நிலையத்தில் கொடுத்தீர்களா என்றால் இல்லை.

2) தூங்குமூஞ்சி மரம் 52 ஆண்டுகளாக அங்கு உள்ளது. காற்று வீசும்போது கிளைகள் முறிந்து விழுவது வழக்கம். மரத்தின் கிளைகள் பட்டுதான் எனது மனைவிக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான், எனது கணவர், எனது மகன்கள் ஆகியோர்கள் சிவக்குமார், தங்கராஜ், ஜோஸ்பின் என்கிற அனுசுயா என்பவர்களை அடித்து காயபடுத்தியதாக என்னுடன் TMCH மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் எங்களை கட்டையால் அடித்தாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. எதிரிகள் கொலை மிரட்டல் விட்டதாகவோ, அடித்தாகவோ கூறுவது பொய் என்றால் சரியல்ல. எதிரி ஜெயச்சந்திரன் கோயம்புத்தூரில் திருமணம் செய்து வாழ்ந்து வந்தார். எதிரி ஜெயச்சந்திரன் மற்றும் அவரது மனைவி சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல.

3) எனது வீட்டுக்கு அருகில் உள்ள ராஜா மற்றும் அவரது மனைவிக்கு சம்பவம்குறித்து தெரியும் என்றால் சரிதான். எனது மகள் ஜான்சியை 1வது எதிரியின் அண்ணனுக்குதான் திருமணம் செய்து கொடுத்துள்ளோம். எதிரிகள் எனது மனைவியை தாக்காதபோது சிவில் வழக்கு இருப்பதால் நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டுக்கு பக்கத்தில் கணேசன், துரைராஜ், ரெத்தினம், கருப்பன், கர்ணன் ஆகியோர் வீடுகள் உள்ளது. அவர்களுக்கும் சம்பவத்தைபற்றி தெரியும். காயம்பட்ட எனது மனைவியை காவல்நிலையத்திற்கு அழைத்துசென்று புகார் அளித்துவிட்டு மருத்துவமனைக்கு சென்றோம். நான் சொல்வதுபோன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் எதிரிகளுக்கும், இந்த சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. எனது வீட்டிலிருந்து காவல்நிலையத்திற்கு 1 மணி நேரத்தில் வந்துவிடலாம். சம்பவம் குறித்து 17 நாட்கள் கழித்துதான் போலிசில் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு)